


# Citations for e-Governance Award WINNERS 2011

Department of Administrative Reforms & Public Grievances, Government of India
Department of Information Technology, Government of India

14th e-Governance Awards

# SPECIFIC SECTORAL AWARD (FOCUS SECTOR - AGRICULTURE)

## GOLD AWARD

## AGRISNET– Agriculture Information Service Network

Department of Agriculture
Government of Tamil Nadu



AGRISNET is an e-initiative of agricultural sector in Tamil Nadu. Associated projects are Agritech Portal and Agmarknet. The online input information service through Agrisnet portal ensures timely sourcing of critical inputs to farmers in the State. Information on all the schemes of the Central and State Governments with criteria for identifying beneficial farmers and extent of subsidiary support are available online for the use of extension workers and farmers. Village level fertility index and soil health card data enables the extension workers to accurately plan for soil health restoration. The Agri-tech portal serves as knowledge platform for the extension workers and farmers and aims at enhancing the technology delivery efficiency. The video conferencing facility makes it possible for any extension worker to interact with experts and scientists.

The weather portal gives weather based Agromet advisories for helping the farming community to plan weather based farming. This information is also disseminated to select farmers through mobile linked SMS interface on a pilot basis. The dynamic market price information support extended through SMS Mobile interface and press releases about prices of pulses, fruits, vegetables and other commodities help farmers to discover higher prices and enhance their incomes.

CONTACT DETAILS

Dr. P. Rama Mohana Rao, IAS
Agricultural Production Commissioner and
Principal Secretary (Agriculture)
Government of Tamil Nadu
Secretariat, Chennai – 600 009
Phone: (044) 25674482 (Office)
09940662277 (Mobile)
e-mail: rammohan1985@hotmail.com

Award WINNERS 2011

सत्यमेव जयते

# Government of India

## National Award for e-Governance, 2010-11

presented to

**AGRISNET – Agriculture Information Service Network**
**Government of Tamil Nadu**

For

**Specific Sectoral Award (Focus Sector – Agriculture)**

**Gold**

R C Misra
Secretary
Deptt. of Administrative Reforms & PG

## பத்திரிக்கைச் செய்தி – 13.02.2011

## தமிழக அரசின் வேளாண்மைத் துறைக்கு 2010–11 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் மின் ஆளுமைக்கான தேசிய தங்க விருது ! !

தமிழக அரசு வேளாண்மைத் துறையின் தகவல் சேவைக்கான வலை வாசலான **“அக்ரிஸ்நெட்” (AGRISNET)** வலை வாசலுக்கு 2010–11 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் மின் ஆளுமைக்கான முதல் பரிசான தங்க விருது வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் 30 மாவட்டங்களில் உள்ள வேளாண்மைத் துறையின் அலுவலகங்கள் மற்றும் 385 வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் ஆகியவை கணினிமயமாக்கப்பட்டு, ரூ.4.37 கோடி செலவில் வலைதள இணைப்பும் கொடுக்கப்பட்டு, **“அக்ரிஸ்நெட்”** என்னும் வலை வாசல் மூலமாக வேளாண் தகவல் சேவை அளிக்கப்படுகிறது. இதனால், தமிழகத்தில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 80 இலட்சம் பண்ணைக் குடும்பங்கள் வேளாண் இடுபொருட்களான தரமான விதைகள், இரசாயன உரங்கள் ஆகியவற்றின் இருப்பு விவரம், அவற்றின் விலை குறித்த விவரங்களை தேவைப்படும்போது உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு பண்ணைக் குடும்பத்தின் கைபேசி எண் உட்பட அனைத்து விவரங்களும் சேகரிக்கப்பட்டு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது இந்த விவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதுவரையில் மண்வள அட்டை மற்றும் கிராம மண்வள குறியீடு போன்றவற்றை நேரில் வந்து மட்டுமே பெற்றுக் கொண்டிருந்த நிலை மாறி விவசாயிகள் கணினி மூலமாக தாங்கள் இருக்கும் இடத்திலேயே இவற்றைப் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகமும் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து தொழில்நுட்ப ஆலோசனைகளையும் அதனுடைய **“அக்ரிடெக்”** வலை வாசல் வழியாக விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. மேலும், 224 வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி பருவநிலை மையங்கள் மூலமாக சேகரிக்கப்படும் விவரங்கள் கணினியில் நேரடியாக பதிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் வானிலை முன் அறிவிப்புகள் செய்யப்படுகின்றன. இது தவிர, பூச்சி நோய் தாக்குதல் குறித்த முன் அறிவிப்புகளும், அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளும் வலைவாசல் வழியாக அளிக்கப்படுகின்றன.

மேலும், வேளாண் விளைபொருட்களின் உள்நாட்டு சந்தை விலை நிலவரம் பற்றிய விவரங்களும் கணினியில் தொகுக்கப்பட்டு விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை இலாபகரமான விலைக்கு விற்று பயன் பெறுகிறார்கள். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் 60 வேளாண் அறிவியல் மையங்களும் வலைதளம் மூலம் இணைக்கப்பட்டு, இம்மையங்களில் அமைக்கப்பட்டுள்ள கண்ணொளிக் காட்சி வசதி (Video Conferencing) மூலமாக விவசாயிகள் வேளாண் விஞ்ஞானிகளைத் தொடர்பு கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று பயன் அடைகின்றனர்.

தமிழகத்தில் உள்ள அனைத்து உழவர் சந்தைகளில் காய்கறி வரத்து, விலை விவரம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பற்றிய தகவல்கள் அனைத்தும் **"அக்மார்க்நெட்"** இணையதளம் மூலமாக அளிக்கப்படுகின்றன.

மேற்கண்ட சேவைகளை வரும் காலங்களில் விவசாயிகளுக்கு குறுஞ்செய்தி சேவை மூலம் அவர்களின் கைபேசிக்கு அனுப்பும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்களால் தங்கள் பயிர் சாகுபடி பாதிக்காத வகையில் திட்டமிடவும், அதற்கேற்ப தங்களின் சாகுபடி பணிகளை மேற்கொள்ளவும், தரமான இடுபொருட்களை தேவைக்கேற்ப பெற்று விளைச்சலை அதிகரிக்கவும், சாகுபடிக்கான நவீன தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று மகசூலைப் பெருக்கவும், சந்தை நுண்ணறிவு பெற்று தங்களின் விளைபொருளை நல்ல விலைக்கு விற்று வேளாண் தொழிலை இலாபகரமாக நடத்தி வாழ்வில் வளம் பெறவும் தமிழக அரசு வேளாண்மைத் துறையின் **"அக்ரிஸ்நெட்"** வலைவாசல் வழிவகுக்கிறது என்பதால் மத்திய அரசு தமிழக அரசு வேளாண்மைத் துறையின் **"அக்ரிஸ்நெட்"** வலைவாசலுக்கு 2010–11 ஆம் ஆண்டுக்கான மின் ஆளுமைக்கான முதல் பரிசான தங்க விருதினை அளித்து கவுரவித்துள்ளது.

மேற்கண்ட விருது 10.02.2011 அன்று மகாராஷ்டிரா மாநிலம் ஔரங்காபாத்தில் நடைபெற்ற தேசிய மின் ஆளுமை மாநாட்டின் போது மேதகு மகாராஷ்டிர ஆளுநர் அவர்களால் தமிழக அரசின் வேளாண்மைத் துறைக்கு வழங்கப்பட்டது. இந்த விருதினை தமிழக அரசின் வேளாண்மைத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப., அவர்களும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ப. முருகேசபூபதி அவர்களும் நேரில் பெற்றுக் கொண்டார்கள்.